**செய்தி வெளியீடு எண்: 455** **நாள்: 21.09.2016**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று **(21.09.2016)** மாவட்ட வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களுடன் கலந்தாய்வுக்கூட்டம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு இரா.காமராஜ் அவர்கள் தலைமையில், சென்னை, சேப்பாக்கம், எழிலகம் கூட்டரங்கில் நடைபெற்றது.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் ஆணையின்படி, புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக, புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை விரைவு படுத்த வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அலுவலர்களை கேட்டுக்கொண்டார். தற்போது இயங்கி வரும் **34** ஆயிரத்து **752** நியாய விலை அங்காடிகளுக்கும் விற்பனை இயந்திரங்கள் (Point of Sale) வழங்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்கள் தங்களது ஆதார் அட்டை விவரங்கள் அல்லது குடும்ப தலைவரின் செல்லிடைபேசி விவரங்களை நியாய விலை அங்காடிகளுக்கு வழங்கப்பட்டுள்ள விற்பனை இயந்திரங்களில், நேரடியாகவோ அல்லது கைபேசி செயலி ( Mobile App) வழி மூலமாகவோ பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இப்பணிகள் அனைத்தும் விரைவில் முழுமையடையும் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் உத்தரவின்படி, புதிய குடும்ப அட்டை வேண்டி உரிய ஆதாரங்களுடன் விண்ணப்பிக்கும் மனுதாரர்களுக்கு 60 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 16 இலட்சத்து 91 ஆயிரத்து 996 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், வழங்குவதற்கு தயாராக உள்ள 16 ஆயிரத்து 409 குடும்ப அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இன்றுவரை, 5 இலட்சத்து 3 ஆயிரத்து 923 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமையன்று நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், இன்று வரை, 5 இலட்சத்து 44 ஆயிரத்து 877 மனுக்கள் பெறப்பட்டு, 5 இலட்சத்து 24 ஆயிரத்து 131 மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, **மாண்புமிகு அம்மா** அவர்கள் ஆட்சி செய்கின்ற தமிழ்நாட்டில் மட்டும்தான் இவ்வகை முகாம்கள் நடத்தப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் உத்தரவின்படி, கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் ஒட்டுநர்கள் மட்டுமல்லாது கடத்தலுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் துணை போகும் நபர்களும் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் (BM ACT) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக, உணவு பொருள் கடத்தல் தடுப்பு காவல் துறையினரால் எடுக்கப்பட்டு வரும் கடுமையான தொடர் நடவடிக்கைகளால் இதுவரை 906 நபர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுதில்லியில் சமீபத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான உணவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில், **மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா** அவர்களின் அரசு எடுத்து வரும், விலைக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினால் அத்தியாவசிய பொருட்களின் விலை வெளிச்சந்தையில் வெகுவாக குறைந்து வருகிறது என்று மத்திய அரசு பாராட்டியுள்ளது. மேலும், **மாண்புமிகு அம்மா** அவர்களின் தலைமையின் கீழ் அர்ப்பணிப்புடன் செயல்படும், "தமிழ்நாடு உணவுப்பொருள் குற்றப் புலனாய்வுத்துறை" இந்தியாவிலேயே மிகச்சிறந்த கடத்தல் தடுப்பு காவல்துறையாக செயல்பட்டு வருவதை பாராட்டியுள்ளது. இக்கூட்டத்தில், கடுமையான அத்தியாவசியப்பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கும் மாநிலங்கள், தமிழக அரசுடன் கலந்து ஆலோசித்து, ஏற்கனவே அனைத்து மாநிலம் (ம) யூனியன் பிரதேசங்களின் தலைமைச்செயலர்களுக்கு மத்திய அரசு அனுப்பிய சுற்றறிக்கையின்படி, நடவடிக்கை எடுக்கவும் உணவுத்துறை அமைச்சர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மாவட்ட வழங்கல் அலுவலர்கள் நியாய விலை அங்காடிகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்கள், ஒதுக்கீட்டு ஆணையின்படி பெறப்பட்டுள்ளனவா என்றும், கிடங்குகளிலிருந்து நகர்வு செய்யப்படும் லாரிகள் மாவட்ட ஆட்சியர்கள் நிர்ணயித்துள்ள வழித்தடங்களிலேயே செல்வதையும், அங்காடிகள் குறித்த நேரத்தில் திறக்கப்பட்டு சீரான முறையில் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றனவா என்றும், கண்டறிய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் Dr.கே.கோபால்,இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப்புலனாய்வுத் துறை இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.A.ஞானசேகரன், இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இணை ஆணையாளர் திருமதி.P.ரமணசரஸ்வதி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**